<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 207/2023</u>

<u>LW:9 PW:7</u>

2026 ஆம் ஆண்டு மே மாதம் 20 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. காமாட்சி | க / பெ. | திரு. பர்குணன் |
| கிராமம் | : | பல்லாவரம் | தாலுக்கா | சென்னை |
| தொழில் | : | உதவி ஆய்வாளர் | வயது | 42 |

**<u>எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.</u>**

**<u>முதல்விசாரணை</u>**

நான் தற்போது சென்னை பல்லாவரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.10.2020 ந் தேதி திருவாரூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பாபுதாஸ் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து போன்மூலம் கிடைக்க பெற்ற தகவலை பெற்று மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த புலிவலம் விஷ்ணுதோப்பு மெயின்ரோட்டை சேர்ந்த கணேசன் மகன் வெங்கடேசன் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று நிலைய குற்ற எண்.1471/2020 சட்டப்பிரிவு 294(b), 324, 506(ii) IPC ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அவர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்வராஜ், சிவா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார். **அந்த மாதிரி வரைப்படம் அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பின்னர் கண்ணுற்று சாட்சியான அபிராமி, கணேசன்,

ஜெய்கர் ஆகியோரிடம் நடந்த சம்பவத்தை பற்றி விசாரணை செய்து அவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்தார். பார்வை சாட்சிகளான சிவா மற்றும் செல்வராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். சம்பவ உண்மையென தெரிந்து எதிரியை 25.10.2020 ந் தேதி காலை 11.00 மணியளவில் திருவாரூர் புலிவலம் பேருந்து நிலையத்திற்கு அருகே கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட வெங்கடேசன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் டாக்டர் தேவேந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடமிருந்து விபத்து பதிவேடு பெற்றுள்ளார். பின்னர் வழக்கு கோப்பினை 15.07.2021 ந் தேதி நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். புகாரில் காயம்பட்ட நபர், சம்பவ இடம் சாட்சிகள், பார்வை மகசர் சாட்சிகளை விசாரித்து மருத்துவரிடமும் விசாரணை செய்தேன். இத்துடன் என் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை தயாராக இல்லாததால் சாட்சி விசாரணை முடிக்கப்படுகிறது.**

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.20 17:01:34 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்